

தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக் நாதன், பொதுச் செயலாளர் அண்ணாமலை, பொருளாளர் வரதன் பூபதி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில், உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவற்றில் வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் தக்க சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருப்பெரும்புதூர் ஸ்ரீராமனுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள் ஆகியோர் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தனர். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 27.2.2025 அன்று முகாம் அலுவலகத்தில், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை யொட்டி வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தார்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் பாளையங்கோட்டை ரஹ்மத் நகர் இதயா மகாலில் மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று சிறப்புரையாற்றினார். மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ வரவேற்புரை யாற்றினார்.உடன் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மைதீன்கான், சுப.சீதாராமன், சுப்பிரமணியன் மற்றும் மாலைராஜா, லெட்சும ணன்,பேச்சிபாண்டியன், ஞானதிரவியம், ராஜம் ஜான்,வசந்தம் ஜெயக்குமார், முத்துச்செல்வி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி மீனாட்சிபுரம் பேரூர் செயலாளர் செல்வம் ஏற்பாட்டில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் மீனாட்சிபுரம் தனியார் மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. கலந்துகொண்டு எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் சம்பந்தமாகவும்தமிழக முதல்வர் பிறந்த நாள் விழாவினை கொண்டாடுவது சம்பந்தமாகவும் ஆலோசனை வழங்கினார்.இக்கூட்டத்தில் போடி தொகுதி பொறுப்பாளர் நேரு பாண்டியன். போடி மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன்மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில், திருக்கண்ணன், செயற்குழு உறுப்பினர் ராஜாரமேஷ் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், பாக முகவர்கள் மற்றும் கழகமுன்னோடிகள் கலந்துகொண்டனர்.